## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை – 2015

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகள் மீள்மதிப்பீடு செய்யப்படுகையில் அச்சொத்துக்களுக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண அணி முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 226,305,369 மற்றும் ரூபா 237,863,651 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றில் கொட்டுவ ஆதிபாத வீதியில் அமைந்துள்ள காணி கட்டிடங்கள் மாத்திரம் 2012 ஆம் ஆண்டின்போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் குறித்த சொத்துக்களின் அணி மீள்மதிப்பீடு செய்யப்படாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மூலம் உண்மையான பெறுமதி நிரூபணமாகவில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 60,430,940 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு பிழைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 161,024 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 59,715,037 ஆன கடன் 2009 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 169,146,980 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,457,175 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 153,689,805 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. தேங்காய் ஏற்றுமதிக்கான கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் வருமானம் ரூபா 142,814,121 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்த போதிலும், 2013 இலிருந்து மீளாய்வாண்டு வரை மிகையொன்று உருவாகியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரச வரிகள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது அதிகாரசபையின் பங்களிப்பு 2011 முதல் 2013 வரை படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் சிறியளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது மீண்டும் 178 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

அதிகாரசபையால் வெளிநிறுவனமொன்றிற்கும் நபரொருவருக்கும் எதிராக ரூபா 1,450,000 கூட்டுத்தொகையான பணத்தை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடுகள் பின்வருமாறு.

- தெங்கு கைத்தொழில் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணி பொருளாதார ரீதியாக பயன்பாட்டிற்கு எடுப்பது தொடர்பாக அபிவிருத்தி முன்னுரிமை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கும் கொள்கைகளைத் தயாரிப்பதற்காகவும் அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- அவ்வாறு தீர்மானிக்கப்படுகின்ற அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு இணங்க செயற்திட்டங்கள் மற்றும் முன்மொழிவு திட்டங்களைத் தயாரித்தல் அல்லது தயாரிப்பதற்காக ஒத்துழைத்தல், செயற்படுத்தல் அல்லது செயற்படுத்துவதற்கு ஒத்துழைத்தல், அதிகாரச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபைகளின் செயற்பாடுகளை கூட்டிணைத்தல், வருடாந்த பாதீட்டை அங்கீகரித்தல், அவர்களுக்கு நிதி வழங்குதல், உரிய முகாமைத்துவ கணக்கீட்டு முறைமைகளைத் தயாரித்தல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்துச் செல்வதற்காக ஆலோசனை வழங்குதலும் ஒத்துழைப்பு வழங்கலும்.

- அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக சபைகளின் செயன்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் சமமான உரிமைகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுகின்ற சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புக்களை மேற்கொள்ளல்.

- தெங்கு கைத்தொழில் மற்றும் அதன் உற்பத்தி தொடர்பாக ஏதேனும் பிரிவொன்றோ அல்லது தெங்கு பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணி மற்றும் தென்னை பயிர்ச்செய்கைக்காக காணிகளை பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் எவரேனும் நபர்களுக்கு தனிப்பட்ட சபையொன்றுக்கு நிதி மற்றும் வேறு ஏதேனும் வகையில் ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சி நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.

- தெங்கு கைத்தொழில் தொடர்பில் தாக்களிக்கும் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும்

- தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள உயிரூட்டுதல் நடவடிக்கைகளுக்காக தேவையானது என அதிகாரசபை அபிப்பிராயப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

  மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

  (அ) தேங்காய் ஏலவிற்பனைக்காக அரசதுறை மற்றும் தனியார் துறையின் 276 தோட்டங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், ஏல விற்பனைக்காக வழங்கப்படுகின்ற தேங்காய்களில் 95 சதவீதமான அளவில் மாத்திரம் அரச துறையின் தோட்டங்களிலிருந்து மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. தனியார் துறையின் தோட்டங்களிலிருந்து ஏலவிற்பனைக்காக அளிக்கப்பட்ட பங்களிப்பு குறைவடைந்திருந்தது.

  (ஆ) அதிகாரச்சட்டத்தின் 20(1) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் தெங்கு உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காகவும் விற்பனை தொடர்பாகவும் விலை முன்மொழிவுகளை அமுல்படுத்துதல், விலையினை நிலையானதாக வைத்துக்கொள்வதற்கான முன்மொழிவுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல், வியாபார விளம்பரங்களின் மூலம் தெங்கு உற்பத்திகளுக்கான கேள்வியொன்றை ஏற்படுத்துதல், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்பட அனைத்து பிரிவுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேங்காய்களை ஏற்றுமதி செய்யும்போது ரூபா 2,000,000 பெறுமதியான பிணை வைப்பொன்று ஏற்றுமதியாளர்களால் அதிகாரசபையில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அவ்வாறு ஆரம்ப வைப்பொன்றை பெற்றுக் கொள்ளாமல் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததுடன், 2015 செப்தம்பர் மாதம் வரையில் ஏற்றுமதிக் கட்டணங்களாக அதிகாரசபைக்கு ரூபா 1,020,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே ஏற்றுமதி கட்டணங்களை பதிவழிக்கும் போது அவ்வைப்பு 25 சதவீதம் வரை குறைவடையும் போது ஏற்றுமதி இடைநிறுத்தப்பட வேண்டிய போதிலும், மூன்று ஏற்றுமதியாளர்களின் ஆரம்ப வைப்பு 4 சதவீதத்திலிருந்து 22 சதவீதம் குறைவடைந்திருந்த போதிலும், அவர்களின் தேங்காய் ஏற்றுமதி இடைநிறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேங்காய் ஏலவிற்பனையை இணையத்தளப்படுத்தல் மூலம் அதிகளவிலான பயிர்ச்செய்கையாளர்களுக்கு அதன் சேவைகளை வழங்கும் நோக்கில் ரூபா 1,018,100 பெறுமதியான சேவை ஒப்பந்தமொன்று தனியார் கம்பனிக்கு 2014 சனவரி

மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டம் 2014 யூலை மாதம் அளவில் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் ஒப்பந்த தொகையில் 65 சதவீதமான ரூபா 661,765 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) தேங்காய் ஏலவிற்பனை செயற்படுத்தல் சுயாதீன நபரொருவரால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஏலவிற்பனை தொடர்புடைய தரகரொருவரால் அது செயற்படுத்துவதால் அந்நடவடிக்கைகள் வெளிப்படையான தன்மையுடன் இடம்பெறவில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3 செயற்பாட்டு செயற்பாடுகள்

அதிகாரசபையால் ஸ்தாபிக்கப்பட்ட கண்டி பிராந்திய அலுவலகத்திற்காக இரண்டு முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரொருவர், இரண்டு வெளிக்கள உதவி உத்தியோகத்தர்கள், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் என 07 ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 1,276,764 தொகையும் ஏனைய மீண்டெழும் செலவினமாக ரூபா 259,187 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், நடப்பாண்டின் போது எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆய்வுகூட பரிசோதனை சேவைகளை விரிவுபடுத்தும் தேவைப்பாட்டின் பேரில் நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தை கோட்டை ஆதிபாத வீதியில் அமைந்துள்ள அதிகாரசபைக்குரிய கட்டிடமொன்றுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் 31 வரை நாரஹேன்பிட்டி ஆய்வுகூட பரிசோதனை சேவைகளை நடாத்திச்சென்ற அலுவலக கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 13,886,542 பெறுமதியான இயந்திரங்கள் 10 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) ரூபா 161,500 பெறுமதியான கயிறு பின்னும் 19 தொகுதிகள் துன்கன்னாவ தும்பு ஆராய்ச்சி நிலையத்தில் 2013 யூலை 20 ஆந் திகதி முதல் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்ததுடன், இவ்வியந்திரங்கள் பயன்படுத்த முடியாத வகையில் பகுதியளவில் துருப்பிடித்திருந்தன.

(ஈ) 1997 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 22,000,000 பெறுமதியான நடமாடும் ஆய்வுகூட வண்டியில் ஆய்வுகூட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமில்லாததன் காரணமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக அதிகாரசபையால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தவாஷி தூரிகை உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,320,000 பெறுமதியான மூலதன உபகரணங்கள் குறித்த உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் ஓராண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளைவற்றுக் காணப்பட்ட இரண்டு இயந்திரங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 208 வால்வுகள் காலாவதியாகியிருக்கையில் மீளாய்வாண்டின்

போது ரூபா 74,000 பெறுமதியான 200 வால்வுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தும்பு தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படும் 05 உபகரணங்கள் கைத்தொழிலாளர்களுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 3,072,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த இயந்திரத்தை நிறுவும் போது தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நீரை தேக்கி வைக்கக்கூடிய இடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் தேவையான போதிலும், அவ்வாறான வசதிகள் பற்றாக்குறையான மொனறாகலை மாவட்டத்தின் 04 தொழில் முயற்சியாளர்களுக்கு 04 இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை காரணமாக இயந்திரங்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய இயந்திரம் கணக்காய்வு திகதியான 2016 யூன் 30 வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 100,500 தொகை செலுத்தி இருப்புக் கட்டுப்பாட்டு கணனி மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறான மென்பொருட்களை இணையத்தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்ய முடியுமென அதிரசபையின் பொறியியலாளரால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அம்மென்பொருட்களை செயற்படுத்தும் போது ஏற்பட்ட குறைபாடுகளை உரிய தனியார் நிறுவனங்களின் மூலம் சீர்செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அதிகாரசபையின் தலைமை அலுவலகம் ஆய்வுகூட சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் கோட்டை ஆதிபாத வீதியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாததன் காரணமாக அக்கட்டிடங்கள் வெளிநிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கி மீளாய்வாண்டில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 4,590,000 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அதிகாரசபையின் இரண்டு நிறைவேற்று மட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஏற்றமொன்று கூடுதலாக செலுத்திய காரணமாக ரூபா 419,073 கூட்டுத்தொகையான சம்பளம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து சம்பளம் அறவிடப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருக்கையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், மற்றைய உத்தியோகத்தரை ஆட்சேர்த்த போது தேவையான அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதி 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் மற்றும் உரிய நிதி ஏற்பாடுகள் அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக ரூபா 1,408,930 செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ஆய்வுகூட உபரணங்களுக்காக ரூபா 20,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரித்தாக ரூபா 156,670 பெறுமதியான உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தினதும் கோட்டை கட்டிடத்தினதும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,500,000 தொகை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட ஹிரியால விவசாயக் கம்பனிக்கு அதிகாரசபையினால் 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,000,000 கடன் தொகை, உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் 06 மாதங்களுக்குள் அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் அதிகாரசபைக்கு ரூபா 1,450,000 தொகை அறவிடப்பட வேண்டியிடிருந்தது.

(ஆ) தனியார் கம்பனியொன்றிற்கு 1985 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 26,715,037 தொகையான கடனுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டித்தொகை மற்றும் கடன் தவணை அறவிடப்படாதிருக்கையில் அக்கம்பனிக்கு மீண்டும் 2002 ஆம் ஆண்டின் போது வட்டியில்லா ரூபா 25,000,000 தொகையும் 2004 ஆம் ஆண்டின் போது ரூபா 6,600,000 வீதம் ரூபா 31,600,000 என கடன் தொகைகள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அக்கடனுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி மற்றும் கடன்தொகையின் பெறுமதி ரூபா 90,357,909 ஆக இருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக ஆட்சேர்ப்பு மற்றும் போலியான சம்பள அளவு நிர்ணயித்தல். |
| (ஆ) செயற்பாட்டு நிர்வாகம் | செயற்பாட்டு நிர்வாக செயற்திறனின்மையின் காரணமாக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டமை. |
| (இ) கணக்கீடு | களஞ்சிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைமை நவீனமயப்படுத்தப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | காலம் கடந்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன் மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்படாமையால் சொத்துக்கள் குறைப்பயன்பாட்டிற்குட்பட்டும் விளைவற்றும் காணப்பட்டமை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட பணம் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமை |